# அரும்புகள்



சிறுவர் கழகங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சிறுவர்களின் உரிமையை யதார்த்தமாக்குவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது. எமது நிறுவனம் சிறுவர் கழகங்களை ஆரம்பித்து அதனூடாக அவர்களது ஆற்றல்கள் திறமைகள் என்பவற்றை வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றது. சிறுவர்கள் தமது திறமைகள், ஆற்றல்கள் என்பவற்றை நாடகம், விளையாட்டு மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். தற்போது இச் சஞ்சிகை மூலமாக தமது எழுத்து ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் இவர்களது முயற்சி தொடர வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈமா கிறாங்கின்
மாவட்ட இணைப்பாளர்
சிறுவர்பாதுகாப்பு (ஐ. இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE

*Realisation of the child right is the nucleus of any works that the Save the Children undertake. We are giving the opportunities to develop the talents and skills of the children by the establishment of children clubs. Children show their talents and skills through the dramas, plays, games, land mines awareness programmes. They have also develop and concern about the well being of other children and the issues that effect their lives. Now they have demonstrated their literary talent by producing a magazine like this.*

*My best wishes for their future efforts of this kind.*

Emer Crangle
*District Co - ordinator*
*Save the Children - Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர்களும் இடப்பெயர்வும்

இன்றைய சிறுவர்கள் தான் நாளைய எதிர்கால சிற்பிகள். ஆம் சிறுவர்கள் நாளைய எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவார்கள். அவர்களால் ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்க முடியும். அவ்வாறு உருவாக்கு வதற்கு அவர்களுக்கு இப்போதே நல்ல சூழ்நிலை, மனோநிலை என்பன அமைய வேண்டும். ஆனால் தற்போது நடைபெறும் யுத்தத்தாலும் வேறுபல அழிவுகளாலும் நாளைய நம் சிற்பிகள் தான் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு அவர்கள் இந்தப் பிஞ்சு வயதிலேயே பாதிக்கப்பட்டால் நாளைய எதிர்காலம் எங்கே போய் முடியும்? என்பது தான் இன்று கேள்விக்குறியாக உள்ளது.

சிறுவர்கள் என்ற வரையறைக்குள் ஒரு வயதிலிருந்து பதினெட்டு வயது வரையான அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர். இவற்றுள் ஆண்கள், பெண்கள் என்ற அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர். இவர் களுக்கென்று பல உரிமைகள் உள்ளன. சிறுவர்களுக்கு உரிய உரிமை கள், சுதந்திரம் போன்றவற்றை வழங்கும் போதுதான் அவர்கள் திறமை யான ஒரு நிலையை அடைய முடியும். இவற்றுள் சிறுவர்களுக்கான பேச்சுச்சுதந்திரம் மிகவும் முக்கியமானது. அவர்கள் தாங்கள் கருதியதை வெளியிடுவதற்கு உரிமையுண்டு. விளையாடவோ ஏனையவற்றைச் செய்யவோ அவர்களுக்கு பூரண உரிமை உண்டு. ஆனால் சில கட்டுப்பாட்டுடனேயே பெற்றோரும் உரிமைகளையும் வழங்க வேண்டும். தற்போது இலங்கையிலே நடைபெற்று வரும் கொடிய யுத்தத்தின் காரண மாக அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நம் போன்ற சிறுவர்களே! இந்த யுத்தத்தினால் இவர்கள் பல வகையில் பாதிக்கப்படுகின்றார்கள். அதாவது மிதிவெடிகள், கண்ணிவெடிகள் போன்றவற்றால் அங்கங்களை இழப்பதும் ஏனைய ஷெல் போன்றவற்றால் பாதிக்கப்படுவதும் சிறுவர் களே! அது மட்டுமல்ல இடப்பெயர்வினால் மிகவும் பாதிக்கப்படுபவர்களும் நம் சிறுவர்களே! சொந்த வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து உறவினர் களின் வீடுகளிலும் பாடசாலைகளிலும் முகாம்களிலும் வாடகை வீடு களிலும் இருக்கும் பல சிறுவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கு கின்றார்கள். இதனால் அவர்களது மனநிலை மிகவும் பாதிப்படைகிறது.

"கொடிது கொடிது வறுமை கொடிது அதனிலும் கொடியது இளமையில் வறுமை..........." என்று புலவராகிய ஔவையாரின் பாட்டிற்கிணங்க வறுமை கொடியது. அது இளம் பிள்ளைகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது அது அவர்களை மிகவும் வருத்துகின்றது. சொந்த இடங்களில் விவசாயமோ கூலி வேலைகளையோ வேறு பல தொழில்களையோ செய்து தம் காணி பூமிகளிலுள்ள சொத்துக்களைக் கொண்டு அன்றாடம் சீவியம் நடத்தும் குடும்பங்களிலுள்ள சிறுவர்கள் இப்போது இந்தக் கொடிய இடம்பெயர்வினால் வறுமை என்னும் கொடிய நோயினை அனுபவிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பெரும்பாலான பெற்றோர் அரசு வழங்கும் நிவாரணத்தை நம்பித் தமது காலத்தைக் கழிக்கின்றனர். நிவாரணப் பொருட்கள் ஒரு மாதத்திற்குப் போதுமானவை என்று வழங்கப்பட்ட போதிலும் அது இருபது நாட்களுக்கே போதுமானதாக இருக்கின்றது. இதனால் முப்பது நாட்களிற்கும் அப்பொருட்களை வைத்துச் சமாளிப்பது அப்பெற்றோரின் கடமையாகவுள்ளது. இதனால் ஒரு நாளைக்கு இருவேளை உணவுதான் அவர்களுக்கு கிடைக்கின்றது. இதனால் அக்குடும்பங்களில் வாழும் சிறுவர்களின் உடல் ஆரோக்கியம் மிக மிகப்பாதிப்படைகின்றது. ஒரு பிள்ளைக்கு இளமையிலே கிடைக்கும் ஊட்டச்சத்து தான் பிற்காலத்தில் வலிமையைக் கொடுக்கின்றது. இந்தக் குடும்பங்களில் வாழும் சிறுவர்கள் பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டவர்களாக ஐம்பது வயதிலேயே குடுகுடு கிழவனாக வேண்டியநிலை ஏற்படும். அதுமட்டுமல்ல இரண்டு நேர உணவை உட்கொள்ளும் பிள்ளைகளுக்கு ஒரு நேர உணவு கிடையாமையினால் சோம்பலுற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் ஆரோக்கியமாக விளையாடவோ படிக்கவோ திறமையான சிந்தனைகளை சிந்திக்கவோ அவர்களால் முடியாது. "பசி வந்திடப் பத்தும் பறந்திடும்" என்று கூறி வைத்திருக்கின்றனர் நம் மூதாதையர்கள். ஆம் பசி வந்தால் அவர்களது திறமைகள் அனைத்தையும் மழுங்கடித்து விடும்.

அடுத்து முக்கியமானதாக இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கல்விப் பிரச்சினை. இது இடம்பெயர்ந்த அனைத்துச் சிறுவர்களும் எதிர்நோக்கும் முக்கியமான ஒரு பிரச்சினையாகவுள்ளது. உறவினர்கள் வீடுகளில் வசிக்கும் சிறுவர்களென்றாலென்ன முகாம்களில் வசிக்கும் சிறுவர்களென்றால் என்ன அனைவருக்கும் இந்தக் கல்விப்பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினை தான்.

இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியிருப்போர் ஒரு வீட்டில் குறைந்தது மூன்று குடும்பங்களாவது வசிக்கின்றனர். இவ்வாறு இருக்கும் போது இட நெருக்கடி மிகவும் அதிகமாகக் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினியையே படுக்கை அறையாகவும் ஆடுமாடுகள் கட்டும் கொட்டிலையே குசினியாகவும் பயன்படுத்கின்றனர். இது மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலை. இந்நிலையில் அங்குள்ள சிறுவர்கள் எங்கேயிருந்து படிப்பது சொந்த வீடுகளில் ஒரு அறையில் ஒருவர் என்று மிகவும் அமைதியான சூழ்நிலையில இருந்து படித்தவர்கள் இங்கே இப்படியான நெருக்கடியில் எப்படி மனதை ஒரு நிலைப்படுத்தி படிப்பது. ஒரு வீட்டில் மூன்று குடும்பம் என்றால் ஒரு குடும்பத்தில் மூன்று சிறுவர்களாவது இருப்பார்கள். ஆக மொத்தம் ஒன்பது பிள்ளை களை ஒரு அறையில் படிக்கவிட்டால் அவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது மிகக்குறைவாகும்.

வீடுகளில் இருக்கும் சிறுவர்களுக்கு இந்த நிலையென்றால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களில் இருக்கும் சிறுவர்களின் கல்விநிலையை எண்ணிப்பாருங்கள். மிகமிக மோசமானதொரு நிலைமையை அனுபவிக்கிறார்கள். ஒரு காணிக்குள் 30 வீடுகள் ஒரு குடும்பத்திற்கு ஒரு அறையளவுதான். சொந்த வீட்டில் படுக்கையறையாகவோ சமயலறையாகவோ இருந்த ஒரு இடந்தான் இப்போது சமயலறை, சாப்பாட்டறை, வரவேற்பறை, படுக்கை அறை எல்லாமாகவும் பயன்படுகிறது. இது மிகவும் கொடுமையான நிலை. வீட்டுக்குள்ளிருந்து படிக்கவே முடியாது அதுசரி வெளியில் வந்தாவது இருப்பமென்றால் சுற்றிவர ஒரே வீடுகள். ஒரே கலகலவென்ற சத்தம் புத்தகத்தை பார்த்துக்கொண்டு இருக்கத்தான் முடியும்.

இது தவிர படிப்பதற்கு வசதியாக கதிரைகளோ மேசைகளோ ஒருவருக்கும் இல்லை. இந்நிலையில் வெறும் நிலத்திலிருந்து படிப்பது சிரமமானதாகவே தோன்றுகிறது. வீட்டில் கதிரை மேசைகளிலிருந்து படித்துப் பழகிய சிறுவர்களுக்கு இது மிகவும் சிரமமான ஒரு விடயமாகவுள்ளது. வீட்டில்தான் இந்நிலையென்றால் பாடசாலைகளில் அது மிகமிக மோசமானது. சில பாடசாலைகளில் மாலை நேரப்பாடசாலை நடைபெறுகிறது. அப்பாடசாலைகளில் வகுப்பில் குறைந்தது அறுபது பிள்ளைகளாவது இருக்கின்றனர். இந்நிலையில் இரண்டு பிள்ளைகளுக்கு ஒரு கதிரை என்ற விகிதத்திலே பங்கிடப்படுகிறது. வீட்டில் மிகச் சிரமத்தை எதிர்நோக்கிய சிறுவர்கள் பாடசாலையில் அதைவிடச் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதுதவிர மாலை நேரப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பன்னிரண்டு மணிக்கே செல்கின்றனர். ஆனால் பெரும்பாலான வீடுகளில் அந்நேரம் மதிய உணவு முடியாது. எனவே காலையில் சமைத்த சிற்றூண்டியுடனோ அல்லது அதையும் உண்ணாமல் கூட பாடசாலைக்குச் செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் வயிற்றில் பசி எடுக்கும்போது படிப்பில் அவர்களால் கவனம் செலுத்த முடியாது. சில பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனங்களில் இயங்குகின்றன. தனியார் கல்வி நிறுவனங்களிலுள்ள கதிரை மேசைகளில் இருப்பதே ஆபத்தானது. அவை திடீரென்று முறிந்து விடக்கூடியவை. அந்த அளவிற்கு மோசமானதாகவே காணப்படுகின்றன. இது தவிர பாடசாலை ஒரு பக்கமும் ரியூசன் ஒரு பக்கமும் நடைபெறும் போது பாடசாலைப் பிள்ளைகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இவற்றைவிட விஞ்ஞானப்பாடங்களில் செய்முறைகளைச் செய்வதற்கு ஆய்வுகூடங்கள் இல்லை. இதனால் மாணவர்கள் செய்முறைப் பயிற்சியில் பின்னடைவை நோக்க இடமுண்டு. அதைவிட நூல் நிலையங்கள் இல்லை. இதனால் மாணவர்களின் வாசிப்பறிவு குறைவடையும். 'வாசிப்பே மனிதனை பூரணமனிதனாக்குகிறது' என்ற பொன்மொழி உண்டு. ஆனால் வாசிப்பதற்கு நூல்களோ நூல்நிலையங்களோ இல்லாத நிலையில் சிறுவர்கள் தவிக்கிறார்கள். அத்துடன் மாணவர்கள் உடற்பயிற்சி செய்யவோ ஓய்வுநேரத்தில் விளையாடவோ விளையாட்டு மைதானம் இல்லை. பிள்ளைகளின் உற்சாகத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் உடற்பயிற்சி அவசியம். ஆனால் உடற்பயிற்சி செய்வதற்கு ஒரு இடமில்லை. இந்நிலையில் சிறார்கள் உடல் ஆரோக்கியமில்லாது சோம்பலாக இருக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே கல்வியை உற்சாகமாக கற்க முடியாத ஒருநிலை ஏற்படுகிறது.

பிள்ளைகளுக்கு விளையாட்டுப் போட்டிகளில்லை. பரிசளிப்பு விழாக்களில்லை. ஒன்றுமே இல்லை. பாடசாலைக்கு மகிழ்ச்சியுடன் செல்லவே பிள்ளைகளுக்கு முடியாமலிருக்கிறது. பாடசாலை என்றதும் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் அவர்களது மனோநிலை மிகவும் பாதிப்படைகின்றது. இடம்பெயர்விலே கல்வி ஒரு மாபெரும் பிரச்சினையாக சிறார்கள் தாண்டவமாடுகிறார்கள்.

கல்விப்பிரச்சினை ஒரு புறமிருக்க சுகாதாரப் பிரச்சினை தலையெடுக்கும் ஒரு பிரச்சினையாகவே உள்ளது. சனநெருக்கடி காரணமாக பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிறுவர்களுக்கு நோய்கள் அதிகமாக தொற்றுகிறது. குறிப்பாக முகாம்களில் வாழும் சிறுவர்கள் அதிகமாக இப்பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். உதாரணமாக ஒரு பிள்ளைக்கு கண்நோய் ஏற்பட்டுவிட்டால் அப்பிள்ளைகளுடன் விளையாடும் முப்பது வீட்டுப் பிள்ளைகளுக்கும் கண்நோய் ஏற்பட வாய்ப்புண்டு. அத்தனை குடும்பங்களும் ஒரு கிணற்றடியில் குளிப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணற்றடியில் நுளம்புகள் பெருகி மலேரியா ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் தொற்றுநோய்களான கண்நோய், மலேரியா, வயிற்றோட்டம் என்பன சிறுவர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

இது தவிர முப்பது வீடுகள் கொண்ட குடும்பங்களிற்கு மூன்று மலசல கூடங்கள் தான் உள்ளதென்றால் அந்நிலையை எடுத்துப் பாருங்கள். அங்கே மலசலகூடத்தினுள் ஒருவர் நுழைந்து வெளியே திரும்பி வரும்வரையும் இன்னொருவர் காவல் நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. காலையில் பாடசாலை செல்லும் சில சிறுவர்கள் மலசலகூடங்களுக்குச் செல்ல முடியாது தவித்தபடியே செல்கின்றனர். இதனால் அவர்களுக்கு வயிற்றில் கோளாறு ஏற்பட்டு பல நோய்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இதைவிட பிள்ளைகள் பல்வேறு விதமான மனிதர்களை சந்திக் கின்றனர், பழகுகின்றனர். இதனால் சில நல்ல பழக்கவழக்கங்களைப் போலவே கெட்ட பழக்கங்கைகளையும் பழகிக்கொள்கிறார்கள். ஏனைய சிறுவர்களுடன் சண்டையிடுதல், படிப்பில் கவனம் செலுத்தாது விளையாடு தல், பாலியல் சம்பந்தமான தூண்டல்கள் ஏற்படுதல் என்ற தீய பழக்கங்களையும் பழகிக்கொள்கிறார்கள். இதனால் சிறுவர்களின் எதிர்காலமே பாதிப்படைகிறது.

இன்னும் இந்த இடப்பெயர்வினால் ஒரு பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் இன்னொரு பகுதிக்கு இடம்பெயரும்போது சனநெருக்கடி மிகவும் அதிகமாகின்றது. அதனால் வீதிகளில் மக்களும் வாகனங்களும் நியதியை விட அதிகமாகவே செல்கின்றனர். அவசரமான இக்காலச் சூழ்நிலையில் வாகனங்கள் அதிகமாகச் செல்லும்போது விபத்துக்கள் ஏற்படுவது சகசமாகி விட்டது. இந்த வீதி விபத்துக்குள்ளாகுபவர்கள் அதிகமாக பாடசாலைச் சிறார்களாகவே இருக்கின்றனர். இதனை நாம் தினமும் பத்திரிகைகளில் பார்க்கக் கூடியதாகவுள்ளது. ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு விபத்துக்களாவது ஏற்படுகின்றது. அதிலும்கூட கூடுதலாக சிறுவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர்.

இவ்வாறு இந்த இடப்பெயர்வினால் சிறுவர்கள் மிகவும் பாதிப்புக்கும் பல பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். இவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக கல்வியறிவு அற்றவர்களாக, அங்க வீனர்களாக, நோயுள்ளவர்களாக நம் எதிர்கால சந்ததியினர் வாழ வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை இந்தக் கொடிய இடப்பெயர்வினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு விடும். அதன்பின் நம் எதிர்காலம் எங்கே போய் விடும் என்பதே இன்றைய கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையைத் தடுக்க வெளிநாட்டு நிறுவனங்கள் பல அருந்தொண்டாற்றி வருவது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதில் சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ), குழந்தைகளின் நல நிலையம், கெயர், U.N.H.C.R., ICRC, போரூட் போன்ற பல நிறுவனங்கள் சிறுவர்களுக்கு கல்வி, பாதுகாப்பு, மருத்துவம் போன்றவற்றை வழங்கி உதவுவது மிகவும் நன்றிக்குரியதும், என்றும் போற்றுதற்குரியதுமான ஒரு செயலாகும்.

ஆக்கம் : **சி. சுகந்தினி**
A/L 2002 மாணவி
துன்னாலை தெற்கு
நலன்புரி நிலையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து

யாழ்ப்பாணம் கல்வி, கலை, கலாச்சாரம் என்பவற்றில் சிறந்து விளங்கி உலக வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வைத்துள்ளது. 80களின் முற்பகுதியில் யுத்தம் எனும் அரக்கன் தோன்றி மேற்குறிப்பிட்டவற்றை மட்டுமல்லாது எம்மக்கள் பலரின் உயிர், உடமை, உடல் உறுப்புக்கள் என்பவற்றை அழித்துள்ளான். நானும் அவ் அரக்கன் தோன்றிய 80களின் முற்பகுதியில் அதாவது 8.6.83 இல் புத்தூர் எனும் வளம் செறிந்த கிராமத்தில் ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தேன். எனது தாய், தந்தை இருவரும் கடல்த்தொழிலாளர்கள். மிகுந்த வறுமைக்கு மத்தியிலும் எனது பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பி வைத்தனர். பிள்ளைப்பராயத்தை இன்பமாக கழித்துவரும் அதேவேளையில் யுத்தம் / வன்முறையின் கொடுமைகளும் என்னைத் துன்பத்திற்கு ஆளாக்கியது. எனது கிராமம் பலாலிக்கு மிக அண்மையிலுள்ளது. யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் அடிக்கடி விமானக் குண்டுவீச்சு, ஷெல் வீச்சு என்பன நிகழும். இதனால் பல உயிர், உடமை இழப்புக்கள் அங்கவீனம் என்பவற்றை நான் பல சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பார்த்துள்ளேன். இவை என்போன்ற பிஞ்சு உள்ளங்களில் ஆழமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. இப்படியான நிகழ்வுகளால் பல சிறுவர்கள் உளப்பாதிப்புக்கு உட்பட்டார்கள். போர்ப்பாதிப்புக்களை நேரடியாக அனுபவித்த / பார்த்த பல சிறுவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தினர், பலர் வெளிநாடு சென்றனர், பலர் தம்மை விடுதலை இயக்கங்களில் இணைத்துக் கொண்டனர். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரலாறு காணாத பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டது. எமது குடும்பம் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்து சென்றது. இடப்பெயர்வின்போது எமது மக்கள் குறிப்பாக சிறுவர்கள் பட்ட இன்னல்கள் வார்த்தைகளில் வடிக்கமுடியாது. நாம் மீண்டும் 1996 வைகாசி மாதம் ஊருக்குத் திரும்பி வந்தோம். ஊருக்கு வந்தபோது பல கட்டடங்கள் இடித்து தரை மட்டமாக்கபட்டிருந்தது. பசுமையாக இருந்த எமது கிராமத்தின் அடையாளம் தெரியவில்லை. நானும் எனது நண்பர்களும் கிராமத்தின் அழிவுகளைப் பார்ப்பதற்காக 12.05.1996 சென்றோம். புத்தூர் சந்தியில் ஓர் இராணுவ சோதனை சாவடி இருந்தது. அப்பாதையால் செல்லவிரும்பாது ஓர் ஒற்றையடிப் பாதையில் சென்று கொண்டிருந்தோம்.

நான் முன்னே செல்ல நண்பர்கள் என்னைப் பின்தொடர்ந்தனர். அப்பாதையில் 200m தூரம் வரை சென்றபோது டமார் என்ற சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. எனது வலது கால்ப் பாதம் துண்டாடப்பட்டது. சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன். இந்நிகழ்வு எனது மனதில் ஓர் விரக்தியை ஏற்படுத்தியது. நான் ஒரு வருடத்திற்கு மேலாக பாடசாலைக்குச் செல்லவில்லை. எமது சனசமூக நிலைய தலைவரின் வற்புறுத்தலினால் நான் மீண்டும் பாடசாலைக்குச் சென்றேன். நான் பாடசாலைக்குச் சென்றபோது எனது நண்பர்களும் ஏனைய மாணவர்களும் என்னைப் பரிதாபத்துடன் பார்ப்பார்கள். அவர்கள் என்னைப் பார்க்கும்போது எனக்கு சங்கடமாக இருக்கும். அவர்கள் என்னைப் பரிதாபத்துடன் பார்த்தால் நான் அவர்களை வெறுக்க வில்லை. என்னை ஊனமுற்றவன் ஆக்கிய யுத்தம் எனும் கொடிய அரக்கனை வெறுக்கின்றேன். இந்த நிகழ்வின் பின்னர் ஏற்பட்ட மனத் தாக்கத்தால் பாடசாலை செல்வதை நிறுத்தி எனது மைத்துனரின் சிறிய கடை ஒன்றில் வேலை செய்கின்றேன். சிறுவர் பாதுகாப்பு நிதியம் எமது கிராமத்தில் வெடிப்பொருட்கள் விழிப்புணர்வுப் பயிற்சி நடாத்தியது. அதில் கலந்துகொள்வதற்கு எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அப்பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சியாளர்களுக்கு எனது அனுபவத்தை விளக்கினேன். அப்பயிற்சியில் கலந்துகொண்ட சிறுவர்கள் எமது கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் வெடிப்பொருட்கள் விழிப்புணர்ச்சி திட்டங்களை நடாத்தி வருகின்றார்கள். நானும் மூன்று பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு எனது அனுபவக்கருத்துக்களை அவர்களுடன் பகிர்ந்தேன். எமது கிராமத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதிய அனுசரணையுடன் ஓர் சிறுவர் கழகம் இயங்குகின்றது. நானும் மாலை நேரங்களில் சிறுவர் கழக செயற்பாடு களில் இணைக்கப்பட்டேன். அங்கு கரம் விளையாடுதல், கைப்பந்து போன்ற நிகழ்வுகளிலும் வாராந்த கூட்டங்களிலும் பங்குபற்றுவேன். மற்றைய சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவதும் அவர்களுடன் கதைப்பதாலும் எனது மனதிற்கு மிகுந்த ஆறுதலாக உள்ளது. எனது காலைப் பார்க்கின்றபோது எனது வாழ்க்கை பாழாக்கப்பட்டதை உணர்கின்றேன். என்னைப் போன்ற போரினால் பாதிக்கப்பட்ட / ஊனமுற்ற சிறுவர்கள் சார்பாக இறைவனை வேண்டுவது வன்முறையற்ற / போர் அற்ற சுமூகமான நிலை எமது பிரதேசத்தில் இருக்க வேண்டும். அதில் சிறுவர்கள் சுதந்திரமாக வாழ்கின்ற ஓர் நிலை ஏற்படவேண்டும் என இதயபூர்வமாக வேண்டுகின்றேன்.

**க. வசந்தகுமார்**
கலைமதி சிறுவர் கழகம்
புத்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள்

**"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"**

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**

என்பன சான்றோர் வாக்கு. ஆனால் இளமைக்கல்வியைப் பெற்றுக் கொள்வதிலும், பெற்றுத்தருவதிலும் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. கல்வி என்பது ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிய அடிப்படை உரிமை, இவ் உரிமையை பிள்ளை அனுபவிப்பதற்குப் பல அக, புறக்காரணிகள் தடையாக இருக்கின்றன.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரையில் கற்கைநெறியைத் தெரிவுசெய்வதில் சுதந்திரமின்மை என்ற அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைப்பாட்டிற்கு அப்பால் சிறார்களின் நாளாந்த நடவடிக்கைகளில் கூட சுதந்திரமின்மை உருவாகியுள்ளது. இந்நிலைக்கும் பெற்றோர் காரணமாக அமைகின்றனர். பிள்ளை விரும்புவது ஒரு துறை, பெற்றோர் விரும்புவது ஒரு துறை. காரணம் நவீன கல்விக் கொள்கைகள் பிள்ளையை மையப்படுத்துவதாக இருக்கின்றபொழுதிலும் எமது பெற்றோர் பிள்ளையைக் காட்டிலும் பாடத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பாடசாலைக் கற்கைக்கு மேலதிகமாக தனியார் நிலைய கல்வி பிரத்தியேக வகுப்புக்கள் பின்னர் வீட்டில் படிப்பு என பெற்றோரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய திணிப்புக்கள் சிறுவர்களை ஓர் இயந்திர முறையான வாழ்க்கைக்கு உட்பட்டவர்களாகவும், சுதந்திரமற்றவர்களாகவும் மாற்றி விடுகின்றது. இவர்கள் விளையாடுவதற்கோ அல்லது தமது நண்பர்களுடன் சேர்ந்து பொழுதைக் கழிப்பதற்கும் முடியாதவர்களாக உள்ளனர். இந்நிலை இன்று பாலர் பாடசாலைச் சிறுவர்களிடையேயும் வளர்க்கப்பட்டு வருகின்றமையானது நீண்ட காலத்தில் அவர்களது கல்வி தவிர்ந்த ஏனைய சமூகச் செயற்பாடுகளில் பங்குபற்றும் உரிமையை தடுப்பதுடன் அவர்கள் உளத்தாக்கங்களுக்கும் ஆளாகவும் வழி வகுக்கின்றது.

இவை தவிர்ந்த யுத்தப்பிரதேசங்களில் வாழ்கின்ற எமது சிறார்களின் கல்விசார் நடவடிக்கைகளினை பாதிக்கின்ற, சூழற்காரணிகள் ஏராளம். குறிப்பாக யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற சிறார்கள் எதிர்நோக்கும் கல்விசார் பிரச்சினைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

பிரதானமாக சுமார் ஒன்றரை தசாப்த காலத்திற்கு மேலாக கொண்டிருக்கும் கொடிய யுத்தத்தினால் நலிவடைந்த குடும்பங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த சிறார்களை அவர்களது பொருளாதாரப் பிரச்சனைகளும் யுத்த அனர்த்தங்களினால் உள்ளத்தில் பசு மரத்தாணியாய் பதிந்துவிட்ட வடுக்களும் அகதி வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளினைக்கூடப் பூர்த்தி செய்யமுடியாத நிலையும் அவர்களது கல்விப் பாதையினின்றும் எங்கோ தூரத்தில் வைத்திருக்கின்றது. இவ் அல்லல்களையும் எதிர்நோக்கிப் பாடசாலை செல்ல எத்தணிக்கும் மாணவர்களிடையே அடுத்தடுத்து அமைந்திருக்கும் சோதனைச் சாவடிகள் சுதந்திரமற்ற உணர்வையும் கல்வியைத் தொடர்வதிலே விசனத்தையும் உண்டுபண்ணி விடுகின்றன. தொடர்ந்து கொண்டு போகும் இக்கொடிய யுத்தத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அதிகம். உற்றார், உறவினர் இழப்பு, கண்ணிவெடிகள், மிதிவெடிகள் போன்றவற்றினால் சிறுவர் உளத்தாக்கங்களுக்கு மத்தியிலும் பலர் கல்வியைத் தொடர்கின்றனர். சிலர் இடையில் நிறுத்தி விடுகின்றனர். மேற்கூறப்பட்ட காரணங்களினால் குடாநாட்டில் 20,000ற்கும் அதிகமான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

மறுபுறத்தில், பிரதேச மாணவர்களில் கல்வியை விருத்தி செய்யும் சமூக சேவை நோக்கம் கொண்ட சமுதாய நிலைப்பட்ட தொழிற்பாடுகள் கூட இன்று எழுச்சிபெற முடியாமலிருப்பதும் சிறார்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. கல்வி மேம்பாட்டு நிறுவனங்களினால் வசதிகளும், சிந்தனை விருத்திக்கான கல்விசார் நிகழ்ச்சிகளும் போட்டிகளும் மற்றும் உள்ளத்தை மேம்படுத்தும் பொழுதுபோக்கு அம்சங்களும் கூட இன்றைய ஊரடங்குச்சட்டங்கள், உட்பிரவேசிக்க முடியாத கட்டுப்பாடுகள் மற்றும் கைது செய்யப்படும் நடவடிக்கைகள் காணாமல் போதல் போன்ற அச்சுறுத்தல்களினால் செயற்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது.

இவற்றினைவிட இன்று யாழ் மாவட்டத்தில் மூலை முடுக்கெங்கும் சினிமா கொட்டகைகளையும், இவற்றிற்குப் புறம்பாக வீடுகளில் ஆரவாரித்துக் கொண்டிருக்கும் சினிமா திரைப்படங்களினது ஆக்கிரப்புக்களும் சர்வதேச கிரிக்கற் ஆட்ட நிகழ்வுகளையும் கூட மக்கள் தமது நெருக்கடியான சூழ்நிலைகளினை உணர்ந்து கொள்வதிலிருந்து எவ்வாறாக திசை திருப்புகின்றதோ அவ்வாறே மாணவச் சிறார்களையும் கல்வியின் வழியினின்றும் பிறழ்வதற்கு வழியமைக்கின்றன. இதற்கு அண்மைக் காலங்களில் வெளியான சாதாரண தர மற்றும் ஆண்டு 5 புலமைப்பரிசில், உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளினது வீழ்ச்சியும் சான்று பகர்ந்து எமது சிறார்கள் கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளினையும், பின்னடைவுகளினையும் எடுத்தியம்புகின்றன.

**செல்வன் கி. ஜெகதீஸ்வரன்**
கலைமதி சிறுவர் கழகம்
புத்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கழகமும் அதன் செயற்பாடுகளும்

புத்தூர் எனும் எமது ஊரிலே மட்டுமன்றி யாழ் மாவட்டத்திலே சிறுவர்களுக்கான ஒரு கழகம் உருவாக்கப்பட்டது என்பது சிறுவர் களாகிய எமது வளர்ச்சிப்பாதையிலே ஒரு மைல்கல் என்றுதான் கூறப்பட வேண்டும். அந்த வகையில் மட்டுமன்றி எதிர் காலத்தில் சிறந்த ஒரு சமுதாயத்தை நிலை நிறுத்த இன்றே அத்திவாரமிட்ட சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) இனரைச் சாரும். இவ்வகையில் கடந்த வருடம் சிறுவர்களாகிய எம்மை (அனைவரையும்) முதல் தடவையாக பெரியவர்கள் அழைத்து கதைத்தல் மட்டுமல்லாமல் எம்மையும் சமூகத்தில் அங்கத்தவர்களாக மதித்து செயற்பட்டு படிப்படியாக எம்முள் ஒளிந் திருந்த திறமைகட்கு முதன்மைத்துவம் கொடுத்ததுமல்லாமல் எம்மை அறிவுசாலுடையவர் களாக மாற்ற களம் அமைத்துக் கொடுத்தது என்றால் மிகையாகாது. இந்நிலையில் எமது கழகம் கழக செயற்பாடுகள் தொடர்பான மேலதிகமாக நோக்குதல் நன்று என்றே எண்ணுகின்றேன்.

"விடிவெள்ளி" சிறுவர் கழகமாகிய எமது கழகம் உருவாகு வதற்கு முன்பு சிறுவர்களாகிய எமக்கு பலவித எண்ணங்கள் தோன்றும். எமது பெற்றோர் தமக்கென பல்வேறு குழுக்களை வைத்துள்ளனர். அம்மாமார்கூட மாதர் சங்கமென ஒற்றுமையாக கூடிக் கதைக்கின்றனர். அண்ணா, அக்காமார் வயது வந்துவிட்டால் நாமும் இளைஞர் கழகத்தில் (Youth Club) சேரலாம். ஆனாலும் அப்படிச் சேர்ந்தாலும் 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் செயற்பாடுகளில் இறங்கிவிட எமது நிலை கைவிடப் பட்டதாகி விடும். இதேநிலை 15 வயது வரை தொடரவே செய்தது. அப்பால் இளைஞர் கழகத்தில் ஓரளவுக்குச் சேரலாம். இப்படியான வேளைகளில் நாம் எமக்குள் குமுறுவது உண்டு. ரியூசனிலும் பள்ளிக்கூடத்திலும் மட்டுமே நாம் ஒற்றுமையாக உலா வர முடிகின்றது. விளையாட்டிலும் மற்றும் பொது நிகழ்விலும் எம்மால் ஒற்றுமையாக பூரணமாக செயற்பட இயலாமல் உள்ளதே என ஏங்கிய நிலையிலேயே "சிறுவர் கழகம்" தோற்றம் பெற்றது. எமது ஏக்கங்களுக்கு செயல்வடிவம் கொடுத்த சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ)ற்கு எமது நன்றிகள் என்றென்றும் உண்டு. இப்படியாக உருவாகிய எமது கழகத்திற்கு சிறுவர்களே தலைவராகவும், பொருளாளராகவும் குழு அங்கத்தவர்களாகவும் என நாமும் செயற்படத் தொடங்கியபோது நாம் அடைந்த ஆனந்தத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவேயில்லை. ஆரம்பத்தில் எம்மில் பலரும் முன்னுக்கு வந்து தமது திறமைகளையும் வெளிக்கொணர தயங்கினாலும் காலப்போக்கில் சகஜமாகி பின் நிகழ்ச்சிகளை செய்வதற்கு சிறுவர் சிறுமிகளாகிய எம்மிடையே போட்டிகள் உருவாகின. இந்நிலையில் எமது கழகத்திற்கு வழிகாட்டிகளாக இருந்த அண்ணா, அக்கமாரும் பெற்றோர் குழு அங்கத்தவர்களும் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரும் கைகொடுத்து எம்மை தூக்கி விட்டனர். செயற்குழுவில் ஆண், பெண் இருபாலருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது போன்று நிகழ்வுகளிலும் வயது, பால், நிலைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு நிகழ்வுகளினை முன்கூட்டியே திட்டமிட்டு சிறப்பாக நடாத்தக்கூடியவர்களாக உள்ளோம்.

கழக செயற்பாடுகளினைப் பொறுத்தவரையில் கல்விசார் நிகழ்வுகள் (பொது அறிவு, பேச்சு, கதை கூறல் போன்ற) விளையாட்டு நிகழ்வுகள் (பலவித விளையாட்டுக்களும் பிரிவு ரீதியாக உண்டு) நாடகம் சார் நிகழ்வுகள் (அபிநயம் செய்தல், நடனம் போன்ற) உட்படக் கலைகலாச்சார நிகழ்வுகளும் நடாத்தி வருகின்றோம். ஊரில் நடைபெறும் கலை கலாச்சார சமய மத நிகழ்வுகளிலும் எமக்கென ஒரு இடம் இப்போது வழங்கப்படுவது என்பது பெருமைக்குரிய விடயமாகக் கொள்ளவேண்டும். ஏனெனில் பொது நிகழ்வு ஒன்றில் எமது பேச்சுக்கு (சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்ற காலம் போய்) மதிப்புக்கொடுத்து பெரியவர்கள் கேட்கும்போது எமக்குப் பயங்கர சந்தோசமாக உள்ளது. நாமும் ஏதோவொன்று உள்ளவர்கள் என "கொலரை" தூக்கி விட முடிகின்றது.


இவை மட்டுமன்றி பொதுப்பரீட்சைக் காலங்களில் பரீட்சை தொடர்பாக கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் ஒழுங்கு செய்வது திறமைகட்கு ஒழுங்கான வரவுக்குப் பாராட்டு தெரிவித்தல், ஒழுங்காக கழகக் கூட்டங்களிற்கு / பாடசாலைக்கு செல்லாதோரை பாடசாலைக்கு செல்ல / கழகக் கூட்டத்திற்கு வர ஊக்குவித்தல், விளையாட்டுப்போட்டி, போட்டிப் பரீட்சைகளினை ஏனைய சிறுவர் கழகங்களுடன் இணைத்து நடாத்துதல் என சிறப்பான முறையில் அனைவரும் பாராட்டும்படியாக இணைந்தும் ஒற்றுமையாகவும் அனைவரும் பொறாமைப்படும்படியாக செயற்பட்டு வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் எமது பகுதியில் மிதிவெடிகள் அதிகமாகக் காணப்படுவதனால் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிநெறி, மற்றும் அவை தொடர்பான விளக்கங்களும் நாடகப் பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சிகள், முதலுதவிப் பயிற்சிநெறி, சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சி, சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பான விளக்கங்கள் எனப் பல்வேறு பயிற்சி நெறிகளிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளோம். நாடகக்குழு அங்கத்தவர்களுடன் சிறுவர் உரிமைகள் சமவாயம் - 10 ஆவது ஆண்டு நினைவு நாளில் பங்கேற்குமுகமாக முதற்தடவையாக எமது ஊர்ச் சிறுவர்கள் கொழும்பு போன்ற புறநகர்கட்குச் சென்று திரும்பியுள்ளார்கள். அத்துடன் நூலகம், விளையாட்டு மைதானம், உபகரணத் தொகுதி என நாமும் செயற்பட தொடங்கியுள்ளோம். இந்நிலை தொடரவேண்டும். இன்னும் பல சிறுவர்கள் திறமையுடையவர்களாக முன்னுக்கு வரவேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பும் இலக்கும். அதுவரை செயற்படுவோம். யுத்தம் மட்டும் முடிவுக்கு வருமானால் இன்னமும் முனைப்புடன் செயற்படுவோம்.

**க. சுவாமிநாதன்**
விடிவெள்ளி சிறுவர் கழகம்
புத்தூர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமும் சிறுவர்களும்

உலக வாழ்வின் சித்தம்
கலகம் தந்தது யுத்தம்
உயிர்களில் வழிந்தது ரத்தம்
உணர்வை உடைத்தது சத்தம்
சிறுவர் வாழ்வின் சின்னம்
சிதைத்தது துவக்குச் சன்னம்
மண்ணுக் கடியில் மர்மம்
கண்ணும் காலும் ஊனம்.

சிக்கித் தவிப்பது சிறுவர்கள்
சீண்டிப் பார்த்தது யுத்தம்
நீண்ட அகதி வாழ்க்கையிலும்
நிவாரணம் கிடைத்தது பாதிதான்
வயிற்றைக் கழுவ முடியாது
வறுமை வாழ்வு வாழ்கின்றோம்
கற்கும் வயதினிலே விறகு
விற்க வேண்டி வந்ததம்மா.

எங்கள் குரல் கேட்கின்றதா
ஏனிந்த நிலைமை பார்த்தீர்களா?
தூங்கக் கூட இடமில்லை
ஏங்கி வாழ்வைக் கழிக்கின்றோம்
கண்ணீர் கலந்த வாழ்விலே
கருணை வேண்டி நிற்கின்றோம்
போரில் இருந்து காப்பாற்றி
பாரில் உதவி புரிவீர்களா?

**ஜோ. ஜெஸ்ரின்**
கொழும்புத்துறை சிறுவர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**விதைகள் விருட்சமானால்**
**நிழல் கொடுக்கும்**
**நிழல் கொடுக்கும் விருட்சங்களை**
**புதைக்கும் குழிகள் எத்தனை எத்தனை**

உலகிலேயே மதிப்பிட முடியாத செல்வம் மனிதம் ஆகும். அவை மாத்திரமன்றி புத்திஜீவிகளும் ஆகும். இந்த வகையில் நோக்குகையில் நாளைய அடிநாதமாக திகழ்பவர்கள் இன்றைய சிறுவர்கள். "சுவர் இருந்தால் சித்திரம் வரையலாம்" என்பார்கள். அதேபோல எதிர்கால சுவர்களாக மிளிரப் போபவர்கள் இன்று வளர்ந்து வருகின்ற சிறுவர்கள். இவர்களை அத்திவாரங்கள் என்று கூறலாம். நிலையான அத்திரவாரங்களை ஆட்டம் காணவிடாது உறுதியான தூண்களாக மாற்றும்போதுதான் அதனால் நல்ல அனுகூலங்களை பெறமுடியும். எனவே ஒரு நாட்டின் நல்ல பிரஜையாக திகழ்வதற்கு அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் நாகரீகம் என்ற போர்வையில் அநாகரிகமான வாழ்க்கை முறையை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். அதேவேளையில் அரசியல் பொருளாதார, சமய சமூக மாற்றங்களினால் வளர்ச்சி, தளர்ச்சிகளையும் எதிர்க்கொள்ள வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளோம். ஒரு பக்கம் யுத்தம் இன்னொரு பக்கம் பொருளாதாரத்தினால் பின்தங்கிய நிலை. இதை விட மினிசினிமாக்கள் நீலப்படக்காட்சிகள் இவ்வாறு பல மாயங்களினால் சிக்குண்டு தவிப்பர்கள் கூடுதலான பங்கை வகிப்பவர்கள் இன்று வளர்ந்து வருகின்ற சிறுவர்களே ஆகும்.

சிறுவர்கள் என்று நோக்கும்போது பல கேள்விகளை எழுப்பக் கூடியதாக உள்ளது. யார் சிறுவர்கள் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள் தான் சிறுவர்கள். அதற்கு மேற்பட்டோர் அனைவரும் அறிவில் விருத்தி யடைந்தவர்கள் என்று எண்ணிவிடுகின்றோம். இந்த வகையில் நோக்குகையில் ஒரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியென்பது 5 வயதுக்குள்ளே பூரணப்படுத்தி விடுகின்றனதான். ஆனால் நாம் அச்சிறுவர்களுக்குரிய உரிமைகள் கடமைகளைச் செய்கின்றோமா? இவைதான் எம்மத்தியில் பெரிய கேள்விக்குறியாகவே காணப்படு கின்றன. ஆகவே சிறுவர்கள் என்னும் பதத்தை அல்லது அவற்றுக்கு வயதெல்லையை கொடுப்போமானால் 1 – 18 வயதுக்குட்பட்டவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் என்று இன்று உலக நாடுகள் பூராகவும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றார்கள்.

எந்தப் பிள்ளையும் நல்லபிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பிலும் சமூகம் என்று கூறமுடியும். கருவறையில் இருக்கும் போதே தாயின் செயற்பாடு மனப்பதிவாகின்றது. அது புதிய உலகத்தை எட்டிப்பார்க்கும்போதே எல்லாமே நல்லவையாக தென்படுகிறது. அதேபோலவே அன்னையின் அரவணைப்பையும் அன்பையும் எதிர்பார்க்கும் இன்றைய சிறுவர்களுக்கு வெகுமதியாக கிடைப்பது கண்டுபிடிப்பும் மிரட்டலும் ஆகும். இவ்வேளையில் பெற்றோர்களின் பாசம் இழக்கப்பட்ட நிலையில் சமுதாயத்தில் காலடி வைக்கின்றது. சமூகத்திலாவது என்னை அன்பாக பார்ப்பார்களா? என்று உள்ளத்தின் ஆழத்தில் வினாவை தொடுத்துக்கொண்டு எதிர்பார்த்து காத்திருக்கின்றது. ஆனால் அந்த சீர்கெட்ட சமூகம் சிறுவர்களை ஒரு பாவனையுள்ள பொருளாகப் பார்க்கின்றது.

இந்த வகையில் நோக்குகையில் குடும்பத்தில், சமுதாயத்தில் பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்குகின்றார்கள். தங்களுக்குரிய தேவைகள் நிறைவு செய்யப்படாதவேளை மனம் உடைந்து போகின்றார்கள். அதேவேளை பெற்றோர்கள் மீதும் மனம் நொந்து கொள்கிறார்கள். இவ்வேளையில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அடுத்து பெற்றோர்களின் கொடூரமான நடவடிக்கைகள் கூட இன்றைய சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படலாம். சிறுவர்களுக்கு தங்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப கட்டுப்பாடுகளை விதித்து அவர்களுடைய தன்னிச்சையான செயற்பாடு களை முற்றாக கட்டுப்படுத்துகின்றார்கள். அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கும் அவர்களுடைய உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. மூன்று பருவங்களைத் தாண்டும் போது அப்பருவத்திற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க மறுத்துவிடுகின் றார்கள். இதனாலும் சிறுவர்கள் பிரச்சினைக்குள்ளாகின்றார்கள்.

அடுத்து இன்றைய சமுதாயத்தில் கட்டிளமைப் பருவத்தினர் கூடுதலாக சினிமா, நீலப்படக்காட்சிக்கும் நாளும் அடிமையாகிக் கொண்டு செல்கின்றார்கள். இப்பருவத்தினருக்கே கூடுதலாக உணர்வு, உணர்ச்சி வேகமும் அதிகமாக காணப்படுவதனால் சினிமா என்னும் மாய உலகினை நம்பி அதுவே வாழ்க்கையாக எண்ணி விடுகிறார்கள். அடுத்து சீர்கெட்ட சமுதாயத்தில் காண்பிக்கப்படும் நீலப்படக்காட்சிகள் இவை வெறும் உணர்ச்சியையும் காமத்தையுமே தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையே பெரும்பான்மையான சிறுவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை என எதிர்கொள்ளப்படுகின்றது.

இதனைவிட இன்றைய சிறுவர்கள் பரிதாபநிலை குடும்பப் பொறுப்பை அவர்கள் தோளில் சுமத்தி விடப்படுகின்றது. இதனை நாம் எமது சமூகங்களில் காணக்கூடியதாக உள்ளது. வீதிக்குவீதி சிறுவர்களே உடன் உழைப்பாளராகின்றார்கள். இவை வீட்டுக்கு வீடு வாசல் படிகளாகக் காணப்படுகின்றன. விறகு வெட்டி சைக்கிளில் சுமந்து விற்கின்றார்கள், குளிர்பானக் கடைகள், தேனீர்க்கடைகள், சைக்கிள் கடைகள், அதைவிட கொடூரமான பிஞ்சு மழலைகளை வெளிநாடு பெயர் சூட்டி அன்னிய நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். அங்கு அந்நியர்களின் கலாச்சாரங்களை பின்பற்ற முயல்கின்றான். இதனால் தீய பழக்கவழக்கத்துக்குள்ளாகின்றான்.

அவன் வாழும் சூழலினாலே பல எதிர்விளைவுகளுக்கு முகம் கொடுக்கவேண்டியவனாகின்றான். இதன் பயனாக புகைப்பிடிக்கும் பழக்கத்துக்குட்பட்டு போதைகளுக்கு அடிமையாக்கிக் கொண்டு வாழ்வை சீரழிக்கின்றார்கள். இவ்வாறு சிறுவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்தமான முறையில் திணிக்கப் படுகின்றார்கள். இன்று சிறுவர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாய் சமுதாயத்தில் நடைபிணங்களாக உலாவிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு எம்முடைய சமுதாயமே சிறந்த எடுகோளாகும்.

இன்றும் சில பெரியார்கள் என்று கூறப்படும் கல்வி அறிவுடையோர் வெறும் வாய்ப்பேச்சில் மட்டுமே உரிமையைப் பற்றி பேசுகின்றார்கள். இன்னும் எத்தனையோ சிறுவர்கள் தங்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை மௌனிகளாக கேட்டு ஏங்குகின் றார்கள். இப்பிரச்சினைக்கு தீர்வாக எமது பெற்றோர்களும் சமுதாய சூழ்நிலையுமே முக்கிய காரணமாயிருப்பதனால் அதனை தட்டிக் கேட்கும் மன உறுதி எம் ஒவ்வொருவருக்கும் வளர வேண்டும்.

**எரிந்து கொழுந்து விடும்**
**சமுதாயத்தில் வெந்து சாம்பலாகும்**
**சிறுவர்களுக்கு நிழல் கொடுக்கும்**
**விருட்சங்களாக வளர**
**இனிவரும் மிலேனியத்திலாவது**
**வழி சமைத்துக் கொடுப்போமாக.**

ஆக்கம்
**A. சன்றூபினோ**
ஆண்டு 11

"றொசாறியன்ஸ்"
சிறுவர் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்கு சிறுவர்கள் எவ்வாறு முகம் கொடுக்கிறார்கள்

உலகத்தில் வாழும் ஒவ்வொரு சிறுவனுக்கும் ஒவ்வொரு பிரச்சினைகள் இருக்கவே கூடும். எவ்வளவு செல்லமாக அன்பாக வளர்ந்தாலும் அவனுக்கு என்று ஓர் சுதந்திரம் இல்லாவிட்டால் அவனிடம் ஒன்றுமே இல்லாததுபோலவே இருக்கும். ஆனால் இன்னொரு சிறுவனோ உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி இடமின்றி வாழுகின்றான். அவன் மனதில் பல போராட்டங்கள் ஒன்றல்ல இரண்டல்ல ஏராளமான ஆசைகள் அவாக்கள் எதிர்பார்ப்பு அதனை தீர்க்க முடியாத நிலையில் அவன் வாழுகின்றான்.

பூமிப்பந்தில் உதிக்கின்ற ஒவ்வொரு ஜீவராசியும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்வை ஓட்ட வேண்டும் என்பதற்காக பல பிரச்சினைகளுக்கு உட்பட்டு வாழுகின்றனர். இறைவனையும் குழந்தையையும் பல விடயங்களுக்கு ஒப்பிட்டுப் பேசினாலும் குழந்தைபடுகின்ற வேதனைகள் துன்பங்கள் துயரங்கள் எல்லோருக்கும் தெரியும். அவற்றைத் தீர்ப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் குழந்தைகளின் பிரச்சினைகள் பூதகரமாக உருவெடுத்து வந்த வண்ணமே உள்ளது.

குழந்தைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தாயின் வயிற்றில் உதயமாகும் போதே அதற்கு முதற்பிரச்சினை ஆரம்பமாகின்றது. குறிப்பாக வறுமையில் வாழும் நாடுகளில் பிறக்கின்ற குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி பிறப்பதினால் அவர்களுக்கு நோய்கள் எதிர்சக்தி குறைவினால் அவர்கள் பல நோய்களுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் உடல் வளர்ச்சி குன்றியும் உள்ளனர்.

அவர்களுக்கு போடவேண்டிய தடுப்பூசி போடாமையினால் அவர்கள் பாதிப்புறுகிறார்கள். அடுத்து பாடசாலை தொடங்கும் வயதில் வறுமையின் கோரத்தாண்டவத்தால் பாடசாலைப் படிகளில் ஏற வேண்டியவர்கள் பல பாதைகளில் பிச்சை கேட்டு அலைகின்றனர். அடுத்து அவர்களின் எதிர்காலம் சிதைவுற்று போய்விடுகின்றது. கள்ளமில்லாப் பிஞ்சு உள்ளம் குழந்தைப்பருவத்தில் அவர்களின் படிப்பைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலமையை அடைகின்றனர். அடுத்து போர் இடம்பெறுவதினால் தாய், தந்தை இழப்பு ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் அநாதைகள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்ற அரவணைப்பு இன்றி வாடுகின்றனர். இதனால் அவர்களது மனரீதியான குழப்பங்களுக்கு ஆளாகி சிறுவயதிலேயே அவர்களது வாழ்வு மிகவும் குன்றி விடுகின்றது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி சிலர் அவர்களை அடிமைகள் போன்று வேலைகள் செய்வதுடன் தொழில்துறைகளில் அவர்களை பாவிப்பதும் சட்டவிரோதமான செயல் களில் அவர்களை ஈடுபடுத்துவதும் இக்காலத்தில் கைவந்த கலையாகும். பல இடங்களில் சிறுவர்களை துன்புறுத்தி வேலைவாங்குதல் பலமான வேலைகளை செய்வித்தல் போன்றன இடம்பெறுகின்றன. எனவே இது மாத்திரமன்றி பாலியல் துர்ப்பிரயோகம், போதைப்பொருள் போன்றவற் றிற்கு சிறுவர்களை பாவிக்கின்றனர். இதனால் சிறுவர் இளவயதிலேயே தம்முடைய வாழ்வை தொலைத்து விடுகின்றனர். மேலைத்தேச நாடுகளில் உதாரணம் இந்தியாவிலே சனத்தொகை அதிகரிப்பதால் குழந்தைகள் சுதந்திரமாக ஓடி ஆட முடியவில்லை. அறையிலேயே அடைபட்டுக்கிடக்கின்றனர்.

இதனால் அவர்களுக்கு இரத்த ஓட்டம் குறைகின்றது. அதிலிருந்து குழந்தைகளின் கால், கைகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. "பூத்துக்குலுங்க வேண்டிய மலர்கள்" விரியும் முன்னே கருக்கப்படுகின்ற காட்சி எம் கண்முன்னே இடம்பெறுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை. இன்னும் வீதி வீதியாய் ஆபாசப்படங்கள் ஒட்டியும் சினிமாப்பாடல்களும் இடம்பெறுகின்றன. பாடசாலைக்குச் செல்லும் சிறுவர் அப்படங்களையே பார்க்கின்றனர். அதனால் வீதியில் விபத்துக்கள் உருவாகின்றது. கல்வி கற்கப்போகும் சிறுவர் தியேட்டரில் படம் பார்க்கவே செல்கின்றனர். படம் பார்ப்பதனால் அவனை வேறு வழியில் இழுத்துச் செல்கின்றது. இனி வரும் காலத்திலும் இவ்வாறு சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகாமல் நல்ல நிலையில் இருக்க, இனி வரும் காலத்தில் நல்லதோர் சந்ததியை உருவாக்க அரசாங்கத்தினால் பல சிறுவர் கழகங்கள் உருவாக்கப் பட்டுள்ளது. அநாதை, கைவிடப்பட்டோர், ஏழை, எல்லோரையும் சமமாக நினைத்து அவர்களை பராமரித்து மகிழ்ச்சியடைய செய்கின்றனர். இனியும் சிறுவர்கள் இவ்வாறு துர்ப்பாக்கிய நிலைமைக்கு ஆளாகாமல் இருப்பார்கள் என நம்புகின்றோம்.

நன்றி.

பொ. சந்திரா
திரேசா சிறுவர் கழகம்
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிப் பொருட்கள் ஓர் உயிர் கொல்லியே

கூடி இருக்கின்றோம் இங்கே கொண்டாடுகின்றோம் வெடிப் பொருளின் மகிமையை.

அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கி பிறத்தல் அரிது என்று நம் ஔவைப்பாட்டி மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இருக்க இடமின்றி உண்ண உணவின்றி வாழக் கொண்டிருக்கும் எம் மக்களிற்கு நிம்மதியாவது வாழ்வில் கிடைக்க வில்லை. எங்கும் மரண ஓலம் வாழ முடியாது வதங்கிக் கொண்டிருக் கும் வாழ்க்கையில் போர் ஏற்படுத்திய அனர்த்தங்கள் இவை.

அன்றைய காலங்களில் போர் என்பது கற்பனைக்கும் எட்டாத ஒன்றாக போரில் ஈடுபட்டுள்ளவர்களை தவிர வேறு யாரையுமே பாதிக்காத போரே நடைபெற்றது. ஏன் இக்காலத்திலும் கூட இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் அப்போரானது குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள்ளேயே நடைபெறு வதனால் அப்போரினால் ஏற்படும் அனர்த்தங்கள் மிகவும் குறைவாகவே உள்ளது.

ஆனாலும் பொதுவான நோக்கில் போர் என்பது ஒரு கொடிய தான ஒரு நோய். அதன் விளைவுகள் மக்களின் எதிர்காலத்தை இருள் சூழ்ந்ததாக்கி விட்டது. கண்ணீரில் கரைந்து போகின்ற வாழ்க்கையாகி விட்டது. கத்தியின்றி இரத்தம் சிந்தாது அகிம்சைப் போர் நடாத்திக் காட்டிய எத்தனையோ பெரியார்கள் இந்த உலகில் வாழ்ந்திருக் கின்றார்கள். அவர்களின் பெயர் இன்று வரைக்கும் பேசப்பட்டுக் கொண் டிருப்பது அவர்கள் நடாத்திக் காட்டிய போராட்டத்தினாலேயே ஆகும். எத்தனையோ லட்சம் மக்களை காக்கவேண்டும் என்பதற்காக நடாத்தப் பட்ட அகிம்சைப் போரெங்கே? இன்று எத்தனையோ லட்சம் மக்களை கொன்றொழிக்க வேண்டும் என்பதற்காக நடாத்தப்பட்ட இன்றைய போரெங்கே? மலைக்கும் மடுவுக்கும் இடையிலுள்ள வித்தியாசமே அகிம்சைப்போரும் ஆயுதப்போரும் ஆகும். வெடிப்பொருடகள் இச்சொல்லை சொல்கின்ற போதே அதன் ஒலி எம்மைக் கொன்று விடுமோ என அச்சம் தர வைக்கும் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே. உச்சி மீது வானிடிந்து விழுகின்றபொழுதும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே என்று கதறிய பாரதி இப்போது இருந்திருந்தால் அச்சங்கொள் அச்சங்கொள் ஆயுதங்களைக் கண்டு நீ அச்சங்கொள் அச்சங்கொள் அச்சங்கொள் இல்லையே நிச்சயமாய் உன் உயிர் உனக்கு சொந்தமில்லையே என்று கண்ணீர் விட்டுக் கதறியிருப்பார். ஆம்.

வீதியில் நடந்து சென்றவனை காலையில் கண்டேன் மாலையில் மரணமாகிவிட்டான். மர்மம் என்ன வெடிப்பொருள் செய்த வேதனையான விளையாட்டு பட்டாசு கொழுத்திப் பார்த்து மகிழ்ந்த காலம் போய் இப்போது மனிதரில் வெடிமருந்தை பட்டாசாக கொழுத்தி மகிழ்கிறதாம் இந்த உலகம். விஞ்ஞானம் வளர்கிறதாம் என்றால் அது பொய் அது இந்த உலகை அழிக்கவே வளர்கிறது என்றால் அது மெய்.

தாயின் மடியிலே பாலருந்திக் கொண்டிருந்த பச்சிளம் பாலகனையும் தன் குழந்தைக்குப் பாலூட்டும் இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த தாயையும் திடீரென ஏற்பட்ட வெடியொலியினால் காணவில்லை. என்னவென்று கேட்டால் வெடி மருந்தால் அவர்கள் உடல் வெந்து போயின. சின்னாபின்னமாக நெஞ்சை உருக்கும் செயல்.

இச்செயலை செய்தது யார்? எதற்காக? இது மட்டுமல்ல வார்த்தைகளால் சொல்ல முடியாத நெஞ்சத்தை பிளிகின்ற அகோர மான செயல்.

ஐந்து வயதுப்பாலகனுக்கு வெடிப்பொருள் செய்த உதவி என்னவென்றால் இரு கால்களையும் இழக்க வைத்ததுதான். இதனை நம் கண்ணால் கண்டு விட்டால் எம் இரண்டு கண்களும் இல்லாமல் போய் விடக்கூடாதா என்று எண்ணத் தோன்றும். வண்ண றோஜா ஒன்றைப் பிடுங்கி வீதியில் எறிந்து விட்டநிலை அந்தப் பாலகனுக்கு.

ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது என்று கதறிய பாரதியை கேட்கிறேன் அதை நமக்கு கற்றுத்தந்த அந்தப் பெரியோர் களைக் கேட்கிறேன் அச்சிறுவனால் எப்படி ஓட முடியும். எப்படி நடக்க முடியும். அவனுக்காக மட்டுமல்ல அவனைப் போலவே உள்ள இந்த உலகத்தில் உள்ளாவர்களை கேட்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை மாறிப்பாடப்போகிறீர்களா அல்லது பார்த்து ரசிக்கப் போகிறீர்களா? அல்லது இந்த நிலை வராது என்ன வழி என்று சிந்திக்கப் போகிறீர்களா?

நம் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் கவனமாக பார்க்க வேண்டிய தேவை இன்றைய கால மனிதனுக்கு இல்லையேல் அவன் தன் கண் முன்னால் தன் அங்கத்தையோ அல்லது உயிரையோ வெடிப்பொருளுக்கு பணயம் வைத்த வாழ்க்கையே வாழ்ந்திருப்பான்.

இனவாதம், வர்க்கவாதம் ஏனையோரை தோற்கடித்து வெற்றி கொள்ள வேண்டும் என்ற கருத்து அதிகாரவெறி, பணவெறி, தன்னலம் என்பவற்றின் போதும் வெடிப்பொருட்கள் பல்வேறு தரப்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால் எம் மனிதரே அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை.

“பிறப்புண்டேல் இறப்புண்டு” என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இன்றைய சூழ்நிலையே பிறப்புண்டேல் வெடிப்பொருளால் ஆபத்துண்டு. இந்தநிலை மாறவேண்டும். இந்நிலை மாற நாமெல்லாம் ஒன்றுபடுவோம். கண்ணிவெடிகளை இல்லாமல் செய்த கூட்டத்தை ஒழுங்கு செய்த “பிரிட்டிஸ் இளவரசி டயானா” போலவே இந்த உயிர் குடிக்கும் வெடிப்பொருளுக்கு எதிராய் அணிதிரட்டுவோம். நிம்மதியில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் இம் மண்ணிற்கு நிம்மதியையும் சுபீட்சத்தை யும் பெற்றுக்கொடுக்க நாமெல்லாம் ஒன்று படுவோம். நமக்குள் நாமே ஒருவரை ஒருவர் அழித்து வாழும் நிலை மாறவேண்டும். பிறந்த ஒவ்வொரு மனிதனும் சிறப்போடு வாழ வேண்டும். சீரிய சமுதாயம் மலர வேண்டும். நாம் எல்லோரும் ஒன்று படுவோம். வெடிப்பொருளை அதாவது கண்ணிவெடிகளை இந்த உலகத்தை விட்டே அகற்றுவோம்.


பதுநான்யா - கந்தசாமி

ஆண்டு - 8

யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கழகம் சிறுவர்க்கு ஓர் வரப்பிரசாதம்

எமது கிராமம் சிறுப்பிட்டி மேற்கு. இது கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம், சாதி என்பனவற்றில் மிகவும் பின்தங்கிய ஓர் கிராமம். இங்குள்ள ஆண்கள் பெண்கள் விவாசயக் கூலிக்காரர்களாக காணப்படு கின்றார்கள். எமது கிராமத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்கு 1997ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வந்தது. அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் ஒன்று பெரும்பான்மையான சிறுவர்கள் பொழுதுபோக்கு வசதிகள் அற்றவர்களாகவும் மற்றவர்களுடன் சேர்ந்து பழகுவது குறைவாகவும் கிராமத்திற்கு உள்ளே மட்டும் தமது தொடர்புகளை வைத்திருப்பவர்களாகவும் காணப்பட்டனர். மேலே குறை பாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் சிறுவர்களுடைய திறமைகள் ஆற்றல்கள் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் எமது கிராமத்தில் அண்ணா சிறுவர் கழகம் ஆரப்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 52 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்காலத்தில் தற்போது நூற்றுக்கு மேற்பட்டோர் அங்கத்தவர்களாக உள்ளனர். ஆரம்பத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் விளையாட்டுப் பொருட்கள், நூலகத்திற்கு 200ற்கு மேற்பட்ட புத்தகங்கள் என்பவற்றை வழங்கினர். கழகம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வீணாக பொழுதைக் கழித்த எமது சிறுவர்கள் தற்போது மாலை நேரங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றார்கள். அதே நேரத்தில் அநேகமாக சிறுவர்கள் நூலகத்திற்கு வந்து அதிக நேரம் வாசிப்பதிலும் ஈடுபடுகின்றார்கள். நூலகத்திலிருந்து புத்தகங்கள் இரவல் கொடுக்கப்படுகின்றது. அதிலிருந்து கிடைக்கும் பணத்திலிருந்து மேலும் ஐம்பதிற்கு மேற்பட்ட புதிய புத்தகங்களை நாம் வாங்கியுள் ளோம். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் எமக்கு தலைமைத்துவப் பயிற்சி, நாடகப் பயிற்சி, நிதி முகாமைத்துவ பயிற்சி என்பன வழங்கப்பட்டது. மேற்படி பயிற்சிகளைப் பெற்ற எமது கழகச் சிறுவர் களும் ஏனைய கழகச் சிறுவர்களும் தாமே தனித்து நின்று மற்றையவர் களின் துணையின்றி செயற்படுவதை பார்க்கும்போது எமது சிறுவர்கள் ஓரளவு வளர்ந்திருக்கின்றார்கள் என்பதை காணக்கூடியதாக உள்ளது. எமது செயற்பாடுகளை அவதானித்த எமது சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தமது நிர்வாக அங்கத்தவர்களாக எமது கழகத்திலிருந்து இருவரை சேர்த்துள்ளனர்.

எமது சனசமூக நிர்வாகத்தினரின் அனுசரணையுடன் எமது சிறுவர் கழகத்தினரால் ஓர் மாலைநேர வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் எமது கழக அங்கத்தவர்களில் 46 சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பல இடங்களில் மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றது. வெடிப்பொருட்களால் காயப்பட்டவர்களில் கூடுதலானவர்கள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். இதனை கருத்தில் கொண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் ஒவ்வொரு கழகங்களிலிருந்து தலா நான்கு அங்கத்தவர்கள் வீதம் கோப்பாய் பிரதேசத்தில் செயற்படும் 7 கழகங்களிலிருந்தும் 30 சிறுவர்களுக்கு வெடிப்பொருள் விழிப்புணர்வு பயிற்சியும் வழங்கப்பட்டது. முதலுதவிப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இப்பயிற்சியை பெற்ற பின்னர் எமது பிரிவில் இயங்கும் 7 சிறுவர் கழக பகுதிகளிலும் அயல் கிராமங்களிலும் 20ற்கு மேற்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தி இருக்கின்றோம். இந்நிகழ்வுகளில் கிட்டத்தட்ட 1200 சிறுவர்கள் பங்குபற்றினர். அத்துடன் வெடிப்பொருட்கள் மீட்கப்படுகின்ற நிகழ்வுகளை நாம் நேரடியாக பார்த்தோம். அதையும் நாம் விழிப்புணர்வு நிகழ்வுகளின் போதும் சிறுவர்களுக்கு விளங்கப்படுத்தி வருகின்றோம். மேற்படி நிகழ்வினை மேற்கொண்டதன் மூலம் பல சிறுவர்களை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றி உள்ளோம்.

இச்சிறுவர்கழகத்தினூடாக ஏனைய சிறுவர் கழக அங்கத்தவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய சமூகத்தவர்களுடன் பழகுவதால் சாதி பாகுபாடு என்பன குறைந்து மற்றவர்களுடன் சமமாக பழகும் வாய்ப்பினையும் இச்சிறுவர் கழகம் ஏற்படுத்தியுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர் கழக அங்கத்தவர்கள் 20 பேர் வெளி மாவட்டங்களுக்கு சென்று சிங்கள சகோதரர்களுடனும் எமது அனுபவங்களை பகிர்வதற்கு ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது இந்த சிறுவர் கழகம் தான். ஆகவே ஒட்டுமொத்தத்தில் சொல்லுவதாக இருந்தால் சிறுவர் கழகமானது சிறுவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

**த. நந்தகுமாரி**
கலைஒளி சிறுவர் கழகம்
சிறுப்பிட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயா அச்சகம்
கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org